
294
119

# புலிசை ஞானியார் அடிகளார்



சுந்தரா சண்முகனார்

# புலிசை ஞானியார் அடிகளார்

*அருள்மிகு ஞானியார் அடிகளாரின்*
*நூற்றாண்டு விழா*
*நிதிதிரட்டு வெளியீடு*

ஆசிரியர்:
ஞானியாரின் மாணாக்கர்
**புலவர் சுந்தர சண்முகனார்**
தமிழ்ப் பேராசிரியர்,
புதுச்சேரி.

வேங்கட்டா
புதுச்சேரி

புலிசை ஞானியார் அடிகளார்
ஆசிரியரின் ஐம்பத்தைந்தாவது வெளியீடு
1973

நூற்றாண்டு விழா நாள்: 20—5—1973
அட்டைப்படம்: திருக்கோயிலுடன் கூடிய
ஞானியார் மடம்

வெளியிட்டு உதவியோர்:
புதுவைப் பைந்தமிழ்ப் பதிப்பகத்தார்
61-C, வைசியர் தெரு,
புதுச்சேரி-1

விலை ரூ. 2-00

கதிர்மணி அச்சகம், புதுச்சேரி-1.

# ஆசிரியர் முன்னுரை

புலிசை என மரூஉப் பெயராக வழங்கப்பெறும் திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் மடத்தில், திருக்கோவலூர் ஆதீனத்தின் ஐந்தாம் பட்டத்து அருளாசானாக வீற்றிருந்து அரும் பெருஞ் செயல்கள் ஆற்றிய 'சிவசண்முக மெய்ஞ்ஞான தேசிகர்' என வழங்கப் பெற்ற ஞானியார் அடிகளார் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா, பிரமாதீச ஆண்டு வைகாசித் திங்கள் 7-ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை மூலநாளில் (20-5-1973) நடைபெற விருக்கிறது.

அடிகளாரின் வியத்தகு மாண்புகளுடன் கூடிய வரலாற்றினை இச் சிறு நூல் சுருக்கமாகத் தருகின்றது.

நூற்றாண்டு விழா நடைமுறைக்காகவும், விழா மலருக்காகவும், நூற்றாண்டு விழாத் தொடர்பாக அடிகளாரின் பெயரில் அமைக்கப்பெற விருக்கும் தமிழ்க் கல்லூரிக்காகவும் பெருநிதி தேவைப்படுகிறது. அந்தப் பெருநிதி திரட்டும் முயற்சியின் ஒரு சிறு கூறாக இந்நூல் வெளியிடப் பெறுகிறது. அதே நேரத்தில், அடிகளாரைப் பற்றி அறியாத இந்தக் காலத்து இளந் தலை முறையினருக்கு அடிகளாரை அறிமுகப்படுத்தும் பணியையும் இவ் வெளியீடு நிறைவேற்றுகிறது.

அன்பர்களின் பேராதரவு வேண்டப்பெறுகிறது.

சுந்தர சண்முகன்

புதுவை
9-4-1973

# ஞானியார் போற்றி

அந்தாதி சதகங்க ளானசிறு நூல்பயில
அண்டிவந் த்வர்க ளொருசார்
அரியதொல் காப்பியம் சித்தாந்த சாத்திரம்
அறியவந் தவர்க ளொருசார்

மந்த்ரவுப தேசமது பெற்றுசிவ பூசைசெய
மருவிவந் தவர்க ளொருசார்
மறைந்தநுண் பொருள்தமை விளக்குமொழி கேட்டுமே
மகிழ்ந்திருப் பவர்க ளொருசார்

இந்தமுறை மடாலய மெங்கணுங் கூட்டமா
யிரவுபக லென்ப தின்றி
யிருந்துநின் மொழிகேட்டுப் புலவரா னோர்தமை
யெண்ணிடத் தகுவ தோதான்

பந்தமற ஞானமொழி பகர்கின்ற பானுவே
பான்மைதரு புலிசை வாழ்வே
பரிவுடைய சிவசண்மு கப்பெயர்கொள் தேசிகநின்
பதமலர்கள் போற்றி போற்றி.

# ஞானியார் சுவாமிகள்

## அறிமுகம்

முப்பது ஆண்டுகட்கு முன் தமிழ் நாட்டில் 'ஞானியார் சுவாமிகள்' என்றால், சிறுவர் முதல் முதியோர் வரை— கற்றவர் கல்லாதவர், தொழிலாளர் அரசாங்க உயர் அலுவலர், ஏழையர் செல்வர் முதலிய பலரும் அறிவர். அருள்மிகு சமயத் தலைவராயும் கற்றுத்துறைபோகிய பெரும் புலவராயும் தலைசிறந்த பேச்சாளராயும் திகழ்ந்த திருவருட் செல்வர் ஞானியார் அடிகள். அவர்களிடம் முறையே பாடங்கேட்டுப் பெரும் புலவரானவர்கள் நூற்றுக்கணக்கானவர். அடிகளாரின் சொற்பொழிவுகளைக் கேட்டுப் புலமை பெற்றவர்கள் ஆயிரக்கணக்கானவர். அவர்தம் அருளுரைகளைச் செவி மடுத்து நல்லறமும் நல்லொழுக்கமும் உடையவராய்த் திகழ்ந்தவர்கள் நூறாயிரக் கணக்கானவர்கள்.

தமிழிலும் வடமொழியிலும் மிக்க புலமையும் ஆங்கிலத்தில் போதிய திறமையும் பெற்றுத் திகழ்ந்தவர் அடிகளார். கேட்டவர் உள்ளங்களைத் தம்பால் ஈர்த்துப் பிணித்து, நான்கு மணி நேரம் — ஐந்து மணி நேரம்

சேர்ந்தாற்போல் தொடர்ந்து சொற்பொழிவாற்றும் பேராற்றல் படைத்தவர் அடிகளார். பெருந்தலைவர்கள்-பெரும்புலவர்கள் பலரும் அடிகளாரின் திருவடிகளில் விழுந்து வணங்கித் திருநீறு பெற்றுப் பெருமையுறுவர் தமிழ்நாடு முழுவதும் அன்பராயினுர் பலர், எங்கள் ஊருக்கு வரவேண்டும்-எங்கள் ஊருக்கு வரவேண்டும் என வேண்டி அன்புடன் அழைத்துச் சென்று சொற்பொழி வாற்றச்செய்து கேட்டு மகிழ்வர். அடிகளாரின் தலைமையில் பேசாத பெரும் புலவர்கள் இல்லை எனலாம்; அடிகளார் தலைமை தாங்கிப் பேசாத பெருங் கழகங்களும் இல்லை எனலாம்.

அடிகளார் இட்ட பணிகளை அன்புடன் செய்வதைத் தம் வாழ்நாளில் பெற்ற பெரும் பேருகக் கருதியோர் பலர். அடிகளார்க்குத் தம் அன்புக் காணிக்கையாகப் பழ வகைகளைக் கூடை கூடையாகக் கொண்டுவந்து குவித்தவர் பலர். ஒருவரோடொருவர் போட்டி போட்டுக் கொண்டு தாமே வலிந்து சென்று அடிகளார்க்கு விசிறி விசிறுவதைத் தம் பிறவிப் பெரும்பயனுகக் கருதி இறுமாந்தவர் பலர். மணிக்கணக்கில் அடிகளாரின் திருமுன்பு அடக்க ஒடுக்கமாக அமர்ந்து உரையாடி உவகைக் கடலில் திளைத்துச் செம்மாந்தவர் பலர்.

இத்தகு பெருஞ்சிறப்புகட்குரிய பெருமகனுர் எங்கே பிறந்தார்? எங்கே வளர்ந்தார்? எங்கே வாழ்ந்தார்?

## பிறப்பு வளர்ப்பு

கும்பகோணத்திற்கு அண்மையிலுள்ள திருநாகேசுரம் என்னும் திருப்பதியில், சீமுக ஆண்டு வைகாசித்திங்கள்

நான்காம் நாள் (17-5-1873), வீரசைவ மரபினரான அண்ணாமலை என்னும் ஐயாவுக்கும் பார்வதி என்னும் அம்மையாருக்கும் திருமகனாராக அடிகளார் தோன்றினார். பெற்றோர் இட்ட பிள்ளைமைப்பெயர் 'பழநி' என்பது. காவிரிக்கரையில் பிறந்த பழநி, பிறந்த ஆறு திங்களுக்குள் கெடிலக்கரைக்கு வந்துவிட்டார்.

கெடிலம் சுற்றி வளைத்துக்கொண்டு ஓடும் திருப்பாதிரிப்புலியூர் என்னும் நகரில் 'ஞானியார் மடாலயம்' என்னும் 'அறநெறியகம்' ஒன்று உள்ளது. அவ்வறநெறியகத்தின் தலைவராய் (மடாதிபதியாய்) அப்போது 'சிவசண்முக பரசிவ மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள்' என்னும் அடிகளார் வீற்றிருந்தார் இவர் நான்காம் பட்டத்து அடிகளாராவார். இவருக்கு முன்பு அருள்நெறியகத் தலைவராய் மூவர் வீற்றிருந்தனர். முதல் பட்டத்து அடிகளார் திருக்கோவலூரில் அருள்நெறியகம் அமைத்து அருளாட்சி புரிந்து வந்தார். அவர்கட்கு 'ஆறுமுக சுவாமிகள்' என்பது அருள்நெறிப் பட்டப் பெயர். திருக்கோவலூரிலுள்ள தலைமை நிலையத்திற்கு, செஞ்சி, திருவண்ணாமலை, விருத்தாசலம், ஆரணி, திருப்பாதிரிப்புலியூர் முதலிய ஊர்களில் கிளை நிலையங்கள் ஏற்பட்டிருந்தன. அடிகளார் எல்லா ஊர் நிலையங்கட்கும் சென்று தங்கிவரினும், திருக்கோவலூரிலேயே பெரும்பாலும் தங்கியிருந்தார். அவர்கள் இறுதி யெய்தியதும் அங்கேயே.

ஆறுமுக சுவாமிகட்குப் பின், இரண்டாம் முறை பட்டத்து அடிகளார் பெரும்பாலும் திருப்பாதிரிப்புலியூர் அருள்நெறியகத்திலேயே தங்கி வாழ்ந்துவந்தார்கள். அவர்களைத் தொடர்ந்து இன்று வரையும் அடுத்தடுத்துப் பட்டத்திற்கு வந்த அடிகளார் அனைவரும் திருப்பாதிரிப்

புலியூர் நிலையத்தையே தலைமை நிலையமாகக் கொண்டு விட்டனர். இருப்பினும், திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் மடம், 'திருக்கோவலூர் ஆதீனம்' என்றே இன்றும் சிறப்பாக அழைக்கப்படுகிறது.

திருப்பாதிரிப்புலியூரில் அருளாட்சி புரிந்து வந்த நான்காம் பட்டத்து அடிகளார்க்கு, திருநாகேசுரத்தில் பிறந்த பழநியின் குடும்பத்தினர் உறவுமுறை உடையவர்கள். எனவே, அடிகளார், பழநியின் தந்தையைக் குடும்பத்துடன் பாதிரிப்புலியூருக்கு வந்து அருள் நெறியகத்தின் செயலாளர் பொறுப்பை ஏற்கும்படி பணித்தார்கள். அவ்வாறே அவரும் ஆறு திங்களும் நிரம்பாத பச்சிளங் குழந்தை பழநியுடன் குடும்பத்தை அழைத்துக் கொண்டு வந்து பாதிரிப்புலியூரில் குடியேறினர்.

## பட்டம் சூடுதல்

குழந்தை பழநி வளர்பிறையென வளர்ந்து வந்தது. தமிழ், தெலுங்கு, வடமொழி, ஆங்கிலம் ஆகிய மொழிகள் சிறுவர் பழநிக்குக் கற்பிக்கப்பட்டன. 1889-ஆம் ஆண்டில் இளைஞர் பழநி 'பிரீ-மெட்ரிகுலேழ்சன்' (Pre-Matriculation) வகுப்பில் படித்துக் கொண்டிருந்தார். அப்போது நான்காம் பட்டத்து அடிகள், தமக்கு உடல்நிலை மாறுபாடுற்று இறுதிநிலை அணுகிக்கொண்டிருப்பதை உணர்ந்தார்; பள்ளிப் படிப்பை நிறுத்திப் பழநிக்கு, விரோதி ஆண்டு ஐப்பசித்திங்கள் மூன்றாம் நாள் (20-11-1889) துறவு (சந்நியாசம்) ஈந்தார்; ஞானியார் மடத்தின் அருள்தலைவராகப் பட்டம் சூட்டினர்; 'சிவ சண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள்' என்னும் பட்டப் பெயரும் அருளினர். நான்காம் பட்டத்து அடிகளார் இறையடியெய்த, பழநி தமது பதினேழாவது வயதில் ஐந்தாம் பட்டத்து அடிகளாராகப் பதவியேற்றார்.

இளமையிலேயே துறவறமும் அருளாசிரியர் தலைமையும் ஏற்ற ஐந்தாம் முறை அடிகளார், மடத்துச் சோற்றை வளமாக உண்டுகொண்டு வறிதே தசை மூட்டையை வளர்த்துக் கொண்டிருக்கவில்லை; அடிகளார் தக்க ஆசிரியர்களை அமர்த்திக்கொண்டு தமிழ் மொழியையும் வட மொழியையும் பரந்த அளவில் பயின்று பெரும் புலமை பெற்றார்; தமது நேரம் முழுவதையும் நூல் ஆராய்ச்சியிலேயே ஈடுபடுத்தினார்.

## அடிகளாரின் அருட் பணிகள்

கடல் நீரை முகந்து கறுத்துத் திரண்ட முகில்கள் பெருமழை பொழிவது போன்று, சிறக்கக் கற்றுத் தெளிந்த அடிகளார் கருத்துச் செறிந்த சொல்மழை பொழியத் தொடங்கினார். ஒரு மணி நேரம் பேசினாலே பெருமூச் செறிந்து மின் விசிறியை விட்டகலாதிருக்கும் பெருமக்கள் நிறைந்த இவ்வுலகில், அடிகளார் ஒரே நாளில் ஒரே மூச்சாக ஐந்து மணிநேரம் தொடர்ந்து சொற்பொழிவாற்றுவது வழக்கம். இவ்வாறு பல நாட்கள் தொடர்ந்து சொற்பொழிவாற்றுவார். யார் வேண்டுமானாலும் எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் தொடர்ந்து சொற்பொழிவாற்றலாம் — ஆனால், கேட்பதற்கு ஆட்கள் வேண்டுமே! மக்கள் ஐந்து மணிநேரம் தொடர்ந்து அமர்ந்து கேட்பதென்றால், மிகவும் கவர்ச்சியான சுவையான பயன் மிக்க கருத்துக்களை வரையாது வாரி வழங்க வேண்டுமல்லவா? அதைத்தான் அடிகளார் செய்து வந்தார்.

ஒரு நாளில் மாலை ஐந்து மணி தொடங்கி இரவு பத்து மணி வரையும் சொற்பொழிவாற்றுவதோடு அடிகளாரின் பணி அமைந்து விட்டதா? இல்லையில்லை. நாடோறும் முற்பகலிலும் பிற்பகலிலும் இடையறாது மாறி மாறி வரும்

மாணுக்கர்கட்கு மணிக்கணக்கில் பாடம் கற்பிப்பதிலும் அடிகளார் பொழுதைச் செலவிடுவர். மாணுக்கர் குழுவில் எளிய இளைஞர்களும் இருப்பர்; அரசாங்க உயர் அலுவலர் களும் இருப்பர். சொற்பொழிவாற்றும் நேரம்போக-பாடங் கற்பிக்கும் நேரம்போக—எஞ்சிய நேரங்களிலும் இடை யருது பலர் வந்து அடிகளாருடன் உரையாடிக்கொண் டிருப்பர். ஒவ்வோர் உரையாடலும் ஒரு பாடம் போலவே ஒருசொற்பொழிவு போலவே சுவை மிக்கதாய்-பயன் நிரம் பியதாயிருக்கும். தமிழை அடிகளாரின் திருவாயிலிருந்து கேட்கவேண்டும். உரையாடும் போதும், வழுவற்ற— கொச்சையில்லாத செவ்விய இலக்கண நடையிலேயே அடிகளார் பேசுவர். இத்தகு பயன் செறிந்த உரையாடல் களும் பாடங்களும் சொற்பொழிவுகளும் திருப்பாதிரிப் புலியூரில் மட்டுமன்று — அடிகளார் செல்லும் ஊர்களில் எல்லாம் நடக்கும். ஓராண்டல்ல — ஈராண்டல்ல — தமது வாணுள் முழுதும் அடிகளார் இந்த அருட்பணியை ஆற்றி வந்தார்கள்.

சைவமும் தமிழும் தழைக்க அடிகளார் பல ஊர்களில் தமது தலைமையில் பலகழகங்கள் தோற்றுவித்துள்ளார்கள். 1900-ஆம் ஆண்டு மடத்தில் 'வாணி விலாச சபை' அமைத்தார்கள்; பாலவநத்தம்சமீன்தார் பாண்டித்துரைத் தேவர் வாயிலாக மதுரையில் 24-5-1901-ஆம் நாள் 'தமிழ்ச்சங்கம்' தோன்றச் செய்தார்கள்; சென்னை சைவ சித்தாந்த மகா சமாசம் 7-7-1905 ஆம் நாள் அடிகளாரால் தோற்றுவிக்கப் பட்டது. திருப்பாதிரிப்புலியூர் உட்படப் பலவிடங்களில் அடிகளார் மாநாடு நடத்திஞர்கள்; பல கழகங்களின் ஆண்டு விழாக்களுக்கும் வெள்ளி விழாக் களுக்கும் மாநாடுகளுக்கும் தலைமை தாங்கிஞர்கள். இவற்றுள், சென்னை சைவ சித்தாந்த சமாசத்தின் மாநாடுகள், திருப்பாதிரிப் புலியூர்ச் சைவப் பெரியார் மாநாடு, தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச்சங்க வெள்ளிவிழா,

புதுவைக் கலைமகள் கழக ஆண்டுவிழா, கோவல் தமிழ்ச் சங்க விழாக்கள் முதலியவை மிகவும் குறிப்பிடத்தக்கவை. புலியூரிலும் பிறவூர்களிலும் அடிகளாரின் தலைமையிலும் திருமுன்பும் சொற்பொழிவாற்றி அடிகளாரோடு தொடர்பு கொண்டு பெருமைபெற்ற பெருமக்களுள், திரு.வி.கலியாண சுந்தர முதலியார், மறைமலையடிகள், ந. மு. வேங்கட சாமிநாட்டார், ச. சோமசுந்தர பாரதியார், பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார், வண்டிப்பாளையம் பேராசிரியர் உருத்திரசாமி ஐயர், க. நமச்சிவாய முதலியார், கே. கோ தண்டபாணி பிள்ளை, த. வே. உமாமகேசுரம் பிள்ளை, கரந்தைக் கவியரசு வேங்கடாசலம் பிள்ளை, எஸ். வையாபுரிப் பிள்ளை, டி. கே. சிதம்பரநாத முதலியார், சென்னை ம. பாலசுப்பிரமணிய முதலியார், வேங்கடராசலு ரெட்டியார், தெ. பொ. மீனுட்சிசுந்தரம் பிள்ளை, சி. எம். இராமச்சந்திரஞ் செட்டியார், ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை முதலியோர் பெரிதும் குறிப்பிடத்தக்கவர்கள்.

பெருமழைப் பேச்சாளர் மணம்பூண்டி ம. ரா. குமாரசாமிப் பிள்ளை, காஞ்சிபுரம் பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளி முன்னுள் தலைமையாசிரியர் க. வச்சிரவேலு முதலியார், தமிழக அரசின் தமிழ்வளர்ச்சித்துறை முன்னுள் இயக்குநர் மு. இராசாக்கண்ணனுர், அண்ணுமலைப் பல்கலைக்கழக முன்னுள் தமிழ் விரிவுரையாளர் லால்குடி அ. நடேச முதலியார், விழுப்புரம் நகராட்சி உயர்நிலைப் பள்ளித் தலைமைத் தமிழாசிரியர் ந. ஆறுமுக முதலியார் முதலியோர் அடிகளாரின் மாணுக்கர்களுள் குறிப்பிடத் தக்கவர்கள்.

## பள்ளிகள்

அடிகளார் தம் அருள்நெறியகத்தில் தனித்தமுறையில் பலர்க்குப் பாடஞ் சொல்லி வந்ததல்லாமல், திருப்பாதிரிப்

புலியூர்க் கோயில் தெருவில் 'பாடலேசுவரர் தரும பாட சாலை' என்னும் பெயரில் ஒரு கல்விக்கூடம் தோற்றிச் சிறப்புற நடத்தி வந்தார்கள். தம் இறுதிக்காலத்தில் மடத்திற்குள்ளேயே 'ஞானியார் பாடசாலை' என்னும் பெயரில் ஒரு பள்ளி நிறுவினார்கள். ஞானியார் மடத்திற்குச் செல்பவர்கள் இன்றும் அப்பள்ளியைக் காணலாம். ஞானியார் மடத்தில்—ஞானியார் அடிகளாரிடத்தில் கல்வி பயின்றதனால் தமிழாசிரியர்களாக ஆனவர் சிலரின் பெயர்கள் அவர்கள் வேலைபார்க்கும் அல்லது பார்த்த ஊர்ப் பெயர்களுடன் வருமாறு:-

உயர்திருவாளர்கள் ப. கந்தசாமி ஐயர்.—திருச்சி, ந. ஆறுமுகமுதலியார்—விழுப்புரம், அ. நடேசமுதலியார் -அண்ணாமலை நகர், அ. தண்டபாணிமுதலியார்—சங்கம், க. முருகேசமுதலியார்—அரியலூர், மு. இராசாக்கண்ணனார்—சென்னை, இரா. பழநியாண்டிமுதலியார்—கூடலூர், சங்கர ஐயர்—கடலூர், சக்கரபாணி நாயகர்—சிந்தாதிரிப் பேட்டை, சுந்தர-சண்முகம்—புதுச்சேரி, ஆ. சிவலிங்கனார்—மயிலம், க. செந்தில் நாயகம்—திருச்சி, மா. தண்டபாணி—பெரம்பூர், சு. முத்தையன் — நெல்லிக்குப்பம், க. பா. வேல்முருகச் செட்டியார்—திருக்கோவலூர், க. சம்பந்தனார்—கூடலூர், ந. தண்டபாணி—கூடலூர், ந. கருணாநந்தனார்—திருப்பாதிரிப்புலியூர், ந. ஆறுமுகம்—குன்றத்தூர், ந. திருநாவுக்கரசு—நெல்லிக்குப்பம், பா. ஏகாம்பரம்—செங்கற்பட்டு, ப. திருநாவுக்கரசு—கும்பகோணம், வை. இரத்தினசபாபதி—அண்ணாமலை நகர், துரை. ஆறுமுகம் பிள்ளை—கடலூர் முதலியோர். இத்தமிழாசிரியர்களேயன்றி, பல்வேறு துறைகளைச் சேர்ந்த பு. வே. தேவராசமுதலியார், பு. ர. சுவாமிநாதமுதலியார், கி. நாராயணசாமி நாயுடு, ர ஆதிலட்சுமியம்மையார் முதலிய பெருமக்கள் பலர் அடிகளாரிடம் பாடங்கேட்டவராவர்.

## நூல்கள்

அடிகளார் பாடஞ் சொல்வதிலும் சொற்பொழிவாற்று வதிலுமே காலத்தைக் கழித்துவிட்டதால் நூல்கள் இயற்று வதில் கருத்து செலுத்தவில்லை. இருப்பினும், அவ்வப் போது மலரும் மாலையும் போலத் தனிப்பாடல்கள் பலவும் தொகுப்புப் பாடல்கள் பலவும் இயற்றியுள்ளார்கள். இவற்றுள் சில அச்சேறின; மற்றவை என்னவாயின எனத் தெரியவில்லை அச்சேறினவற்றுள், திலகவதி அம்மை துதி, ஞான தேசிகமாலை என்பவை குறிப்பிடத் தக்கவை.

அடிகளார் தனியாக நூல் எழுதவேண்டியதில்லை. அவர்கள் அவ்வப்போது ஆற்றிய சொற்பொழிவுகளைக் குறிப்பெடுத்துத் தொகுத்து அவ்வப்போது வெளியிட் டிருந்தாலேயே நூற்றுக்கணக்கான நூல்கள் தோன்றி யிருக்க முடியும். இதனை யாரும் செய்யவில்லை; அடிகளா ரும் தூண்டவில்லை. இந்தக் காலத்தில் பத்து நிமிடநேரம் ஒரு சிலர் வானொலியில் பேசினாலும் உடனே அந்தப் பேச்சு ஒரு தனி நூலாக வெளியிடப்பெற்று அவர் எழுதி யுள்ள நூல்களின் எண்ணிக்கையில் இடம் பெற்றுவிடு கிறது. இந்தச் 'சூது வாது' அப்போது அடிகளார்க்கோ அடிகளாரைச் சார்ந்திருந்தோருக்கோ தெரியவில்லை. இந்தத் திட்டத்தை அப்போது தொடங்கியிருந்தால், அடிகளாரின் ஒவ்வொரு சொற்பொழிவும் ஒரு பெரு நூலாக உருவெடுத்திருக்கும். ஐயகோ-என்செய்வது! இது நடைபெருததால் தமிழ்மக்களும் வாய்ப்பு இழந்தார்கள் —தமிழ்மொழியும் வளம்பெறமுடியாது போயிற்று—அடி களாருக்கும் பிற்காலத்தில் விளம்பரம் இல்லாதுபோயிற்று.

இருப்பினும் இந்தக் குறைபாட்டை ஓரறிஞர் ஓரளவு நீக்கியுள்ளார். உயர்திரு மு. இராசாக்கண்ணனர்

அவர்கள், கந்தர் சஷ்டி விழாவின் ஆறு நாட்களி லும் அடிகளார் தொடர்ந்து நிகழ்த்திய சொற்பொழிவு களைக் குறிப்பெடுத்துத் தொகுத்து 'கந்தர் சஷ்டிச் சொற் பொழிவுகள்' என்னும் பெயரில் ஒரு தனி நூலாக வெளி யிட்டுள்ளார்கள். இப்படி வந்த சில வெளியீடுகளே அடிகளாரை உலகிற்கு நினைவுபடுத்திக் கொண்டுள்ளன.

அடிகளார் தாம் நூலியற்றி அச்சிட்டிராவிடினும், பழைய நூல்கள் சிலவற்றை அச்சிற்பதிப்பித்துள்ளார்கள்; சில நூல்களைப் பிறர் பதிப்பிக்கவும் ஏற்பாடு செய்துள் ளார்கள். அடிகளார் தாமே பதிப்பித்துள்ள நூல்களுள், திருப்பாதிரிப்புலியூர்ப் புராணம் போன்றவை குறிப்பிடத் தக்கவை.

## அடிகளார் மறைவு

இவ்வாறு பல்வேறு வகையிலும் மக்கட்கு அருட்பணி புரிந்து வந்த அடிகளாரின் மறைவு எதிர்பாராது திடீரென நேர்ந்தது. அடிகளார் 1941-ஆம் ஆண்டின் பிற்பகுதி யில் திருப்பாதிரிப்புலியூரிலிருந்து திருக்கோவலூர் போந்து ஆங்குள்ள அறப்பள்ளியில் சிறிது காலம் தங்கி யிருந்தார்கள்; அன்பர்களின் வேண்டுகோட்கிணங்க அங் கிருந்து கார்த்திகை தீப விழாவிற்காகத் திருவண்ணாமலை சென்று சிறந்த சொற்பொழிவுகள் ஆற்றினார்கள்; அங் கிருந்து திருச்சிராப்பள்ளி சென்று 1941 டிசம்பர் 25, 26, 27-ஆம் நாட்களில் நடைபெற்ற சைவசித்தாந்த மகா சமாசத்தின் முப்பத்தாறும் மாநாட்டிற்குத் தலைமை தாங்கி அரிய அருளுரை வழங்கினார்கள். அங்கிருந்து பழநிக்குப் புறப்பட்டார்கள்; 23—1—1942-இல் பழநியை அடைந் தார்கள். பழநி சைவ சித்தாந்த சபையின் ஆண்டுவிழா

விற்குத் தலைமை தாங்கினர்கள்; அஃதேயன்றி, கோயில் திருவிழா சார்பாக நாடோறும் சொற்பொழிவாற்றினர்கள். 31—1—1942-ஆம் நாள் மாலை "சிவராச யோகம்" என்னும் பொருள்பற்றி அரியதொரு சொற்பொழிவு அருளினர்கள். அந்தோ! அதுதான் அடிகளாரின் இறுதிச் சொற்பொழிவு என்று யாருக்குத் தெரியும்! இரவு 9-30 மணிக்குச் சொற்பொழிவு முடிந்தது. அதன் பிறகு மலை மீதேறிப் பழநியாண்டவரை வணங்கிப் பின்னர்க் கீழிறங்கி வந்து தங்கும் விடுதியை அடைந்தனர்.

வைகறை மூன்று மணிக்குப் பழநியிலிருந்து திருச்சிக்குப் புறப்பாடு. புறப்பாட்டிற்கு வேண்டிய ஆயத்தங்களைக் கவனித்ததால் இரவு முழுதும் தூக்கம் இல்லை. வைகறை மூன்று மணிக்குப் பழநி திருக்கோயிலார் வந்து நகர் எல்லைவரையும் மேளவாத்தியத்துடன் சென்று அடிகளாரை வழியனுப்பி வைத்தனர். சிவிகையிவர்ந்து சென்றுகொண்டிருந்த அடிகளார், பழநிக்கு 11 கி. மீ. தொலைவிலுள்ள 'சிந்தில வாடன் பட்டி' என்னுமிடத்தை நெருங்கிக் கொண்டிருந்தபோது திடீரென உடல் நிலையில் மாறுதல் ஏற்பட்டது பழநிக்குச் செய்தி பறந்தது. மருத்துவர் (டாக்டர்) வருவதற்குள், 1—2—1942-ஆம் நாள் விடியற்காலை 69ஆம் வயதில் அடிகளார் இறைவனடி எய்தினர்கள். வந்து பார்த்த மருத்துவர் கூறியதாவது:-

"Diabetic coma-suddenly developed-no blood in his body at all-wonder how he was able to lecture for four hours daily for a whole week-so sorry-can't help heart failure".

"உடம்பில் சிறிதும் குருதியே இல்லாதிருந்தும், வாரம் முழுதும் நாடோறும் நான்கு மணி நேரம்

தொடர்ந்து சொற்பொழிவாற்றினர் என்பது வியப்பா யுள்ளது"—என்று மருத்துவர் கூறியுள்ளதை நோக்கின், அடிகளார் நாட்டிற்குச் செய்துவந்த நற்பணி எத்தகைய தென்பதை நுனித்துணரலாம். அடிகளாரின் பிரிவறிந்து துடித்த நாட்டு மக்களின் துயரத்திற்கு அளவேயில்லை.

## பாராட்டுரைகள்

அடிகளாரின் ஆழ்ந்த புலமை, சொல்லாற்றல், சமயவேறுபாடின்மை, கல்விப்பணி, நல்லொழுக்கம், இறைநெறி வளர்த்தல், தமிழ்த் தொண்டு, அறநெறி பரப்புதல், அருள் உள்ளம் முதலியவை காரணமாக அடிகளாரைப் பாராட்டாதவர் இல்லை எனலாம். அடிகளார் பட்டத்திற்கு வந்த ஐம்பதாம் ஆண்டு நிறைவு விழாவாகிய பொன்விழாவிற்கு வாழ்த்து அனுப்பியவர்களுள், திராவிடர் கழகத் தலைவர் பெரியார் ஈ. வே. இராமசாமியவர்களும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது. அடிகளார் இருந்தபோதும்—இறுதியெய்திய பின்னரும் அவர்களைப் பாராட்டி எழுதியிருப்பவர்களுள், திரு. வி க., பண்டிதமணி, மு. கதிரேசச் செட்டியார், கே. கோதண்டபாணிப் பிள்ளை, இராசா. சர். அண்ணாமலை செட்டியார், டாக்டர். உ. வே. சாமிநாத ஐயர், ச. வையாபுரிப் பிள்ளை, சி. எம். இராமச்சந்திரஞ் செட்டியார், ந. மு. வேங்கடசாமி நாட்டார், கவியரசு. வேங்கடாசலம் பிள்ளை. கோவல். வடிவேல் முதலியார், தெ. பொ. மீனாட்சி சுந்தரனார், கி. ஆ. பெ. விசுவநாதனார், சுதந்திரா கட்சித் தலைவர் காரைக்குடி சா. கணேசனார், கல்கி ஆசிரியர் ரா. கிருஷ்ணமூர்த்தி, மு. இராசாக் கண்ணனார், க. வெள்ளைவாரணனார் முதலியோர் குறிப்பிடத் தக்கவர்கள்.

இவ்வளவு மாபெருஞ் சிறப்பிற்குரிய ஞானியார் அடிகளாரின் திருவுருவத் தோற்றத்தை நாம் காணவேண்டு மல்லவா? அதனைப் பின்வரும் படத்தில் காணலாம்.



புலிசை ஞானியார் அடிகளார்

அடிகளாரை நேரில் பார்த்தால், பார்த்துக்கொண்டே யிருக்கலாம்போல் தோன்றும். அடிகளாரின் திருவுருவப் பொலிவையும் பல்வேறு சிறப்புக்களையும் குறித்து, தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்கள் அழகு தமிழில் எழுதியுள்ள பாராட்டுரையிலிருந்து சிற்சில பகுதிகள் வருமாறு:—

“ ......... முருகன் சேவடி வருடி உருகும் ஈரநெஞ்சும், அவன் புகழ் பேசி இனிக்கும் நன்றுவும், தண்மை பொழியும் செவ்விய நோக்கும்,வெண்ணீறு துதையும் நெற்றியும், மாணிக்கக் குழை பிறங்குஞ் செவியும், பொன்னொளிரும் மணிமார்பும், கருமைக்கதிர் விரிக்குந் திருமேனியும் ‘சண்முகா—சண்முகா’ என்று நீறளிக்கும் நீண்ட கையுங் கொண்ட அடிகளின் திருவோலக்கப் பொலிவு என்னுள்ளத்தில் ஓவியமெனப் படிந்து நிற்கிறது. அஃது எவர் உள்ளத்தையுங் கவரும்: எவர்க்கும் எளிதில் இன்பூட்டும் ... ... ... ...

......... ஞானியார் சுவாமிகள் மாணுக்கருக்குப் பாடஞ் சொல்லும் போதும், சொற்பொழிவு நிகழ்த்தும் போதும் தொல்காப்பியனராகவும், நற்கீரராகவும், திருவள்ளுவ ராகவும், இளங்கோ அடிகளாகவும், கச்சியப்பராகவும், கம் பராகவும், சேக்கிழாராகவும், வியாசராகவும், நீலகண்ட ராகவும், சிவஞான முனிவராகவும், பிறராகவும் முறை முறையே விளங்கி விளங்கி இலக்கிய இலக்கணச் சாத்திர நுட்பங்களை வெளியிடுவதைக் கேட்டுக் கேட்டுப் புலவ ரானவர் பலர். பழம் புலவர் பலரும் ஞானியார் ஒருவரிடம் விளங்குதல் வியப்பன்றே? ... ... ...

......... சுவாமிகளின் பேச்சுத்திறனை எதற்கு ஒப்பிடுவது? கடல் மடைத் திறப்புக்கா — வெண்கலக் கோட்டை

யில் அரசுவா புகுதலுக்கா — பெரும் புயலுக்கா — ஓயா மழைக்கா? எதற்கு—எதற்கு ஒப்பிடுவது? பலர் பலவாறு கூறுப.

திருப் பாதிரிப்புலியூரில் வீற்றிருந்து அடியவர்க்கருள் புரியும் கோவலடிகள் கருமைபூத்த ஒரு பொறுமைமலை· அம்மலையினுச்சியில் — மூளையில்-கலைமேகங்கள் பொழிந்த அறிவு மழைநீர், தேங்கித் தேங்கிப் புரண்டு திரண்டு பன் முகங் கொண்டெழுந்து முட்டி முடுகி, வாயின் வழியே முழங்கி விரைந்து இடையீடில்லாச் சொற்றொடர் அருவி யாக இழிந்து, பலதிறச் சுவை நுட்பப் பொருள்கள் மிதந்து சுழல, அன்பு வெள்ளப் பெருக்காய்ப் பரவிப் பரந்து, அருள் அலை கொழித்துக் கொழித்து ஓடும். நீர் பருகப் போந்த புலி, கரடி, யானை, மான், பசு முதலியன அருவி முழக்கிலெழும் இன்னொலி கேட்டு, அதில் ஈடுபட்டுத் தன் தன் பகைமை மறந்து மயங்கி நிற்கும். கரை நீராடுவோர் வெள்ளத்திலுறும் மின் விசையால் பிணி நீங்கப் பெறுவர். ஞானியார் சுவாமிகள் பேச்சால் விளைந்த நலன் அளப்பரிது .........

......... தமிழ் நாட்டிலே பல விடங்களிலே பலதிற விழாக்கள் ஞானியார் தலைமையிலே நடைபெறும். அவ்விழாக்களில் என் ஒலி பெறுதன மிகச்சிலவாயிருக்கும். சுவாமிகள் தலைமையில் யான் பேசிய பொருள் வகைகள் பலதிறம். அவைகளையெல்லாம் சுவாமிகளின் முடிவுரை அணிசெய்யும் .........

......... யான் இளமை தொட்டு ஞானியார் சுவாமிகளை (காலில் விழுந்து) வணங்கி வந்தேன். ஒருவரை ஒருவர்

(காலில் விழுந்து) வணங்குதல் கூடாதென்று சிலர் பேசுவர் அவருள் ஒருவர், ' நீங்கள் ஏன் ஞானியாரை மட்டும் வணங்குகிறீர் என்று கேட்டார். அதற்கு, ஞானியாரை வணங்கும் பழக்கம் எனக்கு இன்று ஏற்பட்டதன்று. அஃது ஏற்பட்டு நீண்டகால மாயிற்று. அதை வலிந்து நிறுத்தப் புகுவது ஆணவமாகும் என்று பதிலிறுத்தேன்.
... ... ...

...... ஞானியாரின் மடத்துத் தலைமையும், சிவிகை யூர்தலும் இன்ன பிறவும் சுவாமிகளை வெளியூர் செல்லாத வாறு தகைந்து வந்தன. அவைகள் சுவாமிகளைச் சிறைப் படுத்தின என்றே சொல்வேன். இலங்கை, மலேயா, தென் னாப்பிரிக்கா முதலிய நாடுகள் சுவாமிகளின் தமிழைப் பருக எவ்வளவு விழைந்தன என்பதை யான் அறிவேன்.

1941 - ஆம் ஆண்டு அன்பர் இராமசாமி நாயுடு என்பவர் தென்னாப்பிரிக்காவினின்றுஞ் சென்னை போந்தனர். அவர் சுவாமிகளையும் என்னையும் தென்னாப் பிரிக்காவுக்கு அழைத்துச்செல்ல விரும்பினர். சுவாமிகளைக் காண நாயுடுவும் யானும் காஞ்சி சென்றோம்; சுவாமிகளைக் கண்டோம். நாயுடு சுவாமிகளிடம் தமது கருத்தைத் தெரி வித்தனர். 'எனக்குள்ள தடைகளை முதலியார் சொல்வர்' என்ற பதில் சுவாமிகளிடத்திருந்து நகைப்புடன் பிறந்தது காஞ்சியில் கண்ட அந்நகைமுகக் காட்சியே இறுதி யாயிற்று."

மேலுள்ள திரு. வி. க. அவர்களின் பாராட்டுரையைப் படிக்கும்போது, ஞானியார் அடிகளின் பெருமையை எண்ணிவியப்பதா-திரு. வி. க. அவர்களின் தமிழ்நடையின் சிறப்பை எண்ணி வியப்பதா? என மயக்கம் ஏற்படுகிறது. ஒருவரின் தமிழ்நடை சிறப்பாக இருக்க வேண்டுமானல்,

அவர் எழுத எடுத்துக் கொண்ட பொருளும் சிறப்பாக இருந்தால்தான் முடியும்.

அடுத்து, 'கல்கி' ஆசிரியர் ரா. கிருஷ்ண மூர்த்தியவர்கள் அன்று ஆனந்த விகடனில் அடிகளாரைப் பற்றி எழுதிய பாராட்டுரையிலிருந்து சிற்சில பகுதிகள் வருமாறு:-

"......... சமயப் பெரியார்களுக்குச் சிறந்த உதாரணமாக இன்று தமிழ்நாட்டில் ஒருவரைக் குறிப்பிட வேண்டுமானால் திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீ ஞானியார் சுவாமிகளைத்தான் குறிப்பிடவேண்டும்.

ஸ்வாமிகளின் உருவத் தோற்றத்தைப் பார்த்ததுமே, "இதோ ஒரு பெரியார் இருக்கிறார்" என்னும் உணர்ச்சி நமக்கு உண்டாகும். அவருடைய வாய்மொழிகளைக் கேட்டு, அவருடைய வாழ்க்கை முறையையும் கவனித்தோமானால், அவருடைய பெருமை மேலும் மேலும் நமக்குப் புலனாகும். "அன்பே சிவமாய் அமர்ந்திருக்கும் பெரியார் இவரல்லவா" என்று எண்ணி எண்ணி வியப்போம்.........

'சோனா மாரியாகப் பொழிவார்', 'கடன்மடை திறந்தாற்போல் பேசுவார்' என்பதெல்லாம் சுவாமிகள் விஷயத்தில் உபசார மொழிகள் அல்ல. ஐந்து வருஷத்துக்கு முன்பு அவர் பட்டினத்தடிகளைப் பற்றிச் செய்த பிரசங்கத்தை நான் கேட்டேன். அதில் அவர் கூறிய விஷயங்கள் இன்னும் என் மனதை விட்டு அகலாமல் இருக்கின்றன. சில பேர் பிரசங்க மாரி பொழிவார்கள். அவர்கள் என்ன சொன்னார்கள் என்பதுமட்டும் கேட்பவர்களுக்குத் தெரியாது. பெரியவர் அபாரமாய்ப் பேசினார்; ஆனால், அவ்வளவு பெரிய விஷயங்கள் நமக்கெல்லாம் புரியுமா? என்று

சொல்லிக்கொண்டு போவார்கள். ஆனால் சுவாமிகள் பேச்சு இப்படியல்ல. அவர்கள் பிரசங்கத்தைப் படித்தவர்களும் ரசிப்பார்கள்; பாமரர்களும் விஷயம் இன்னதென்று தெரிந்து கொள்வார்கள். மணி மணியாக, முத்து முத்தாக சுவாமிகள் வாயிலிருந்து வரும் வார்த்தைகள் நம் மனதில் என்றும் அழியாதவாறு பதிந்துவிடும். எப்படிப்பட்ட சிக்கலான சமய உண்மையையும் சிக்கறுத்துச் சொல்வார்கள்.

'உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின்
வாக்கினிலே ஒளி யுண்டாகும்'

என்னும் கவியின் வாக்கை சுவாமிகள் சொற்பொழிவுகள் மெய்ப்படுத்தும்.

ஸ்ரீ ஞானியார் சுவாமிகள் திருப்பாதிரிப் புலியூர் மடாதிபதியாகி இந்த மாதத்தோடு ஐம்பது வருஷங்கள் பூர்த்தியாகின்றன. இந்த ஐம்பது வருஷ காலத்தில் சுவாமிகள் ஆயிரக்கணக்கான சமயப்பிரசங்கங்கள் செய்திருப்பார்கள் ........... எவ்வளவோ பேருடைய வாழ்க்கையைத் தமது உபதேசங்களால் புனிதப்படுத்தி யிருப்பார்கள்

சுவாமிகள் சமயப்பணி செய்வதுடன் தமிழ்ப் பணியும் செய்து வருகிறார்கள். எத்தனையோ பேருக்குத் தமிழ் அன்பையும் தமிழ் அறிவையும் ஊட்டியிருக்கிறார்கள். அரசாங்க உதவியின்றி ஒரு தமிழ்க் கல்லூரியும் நடத்தி வருகிறார்கள். ஸ்வாமிகளின் தமிழன்பு, தமிழ்ச் சுவையின் அனுபவ உணர்ச்சியை அடிப்படையாகக் கொண்டது ......"

மேலுள்ளாங்கு, கல்கி கிருஷ்ணமூர்த்தி, திரு. வி. க. போலவே உண்மையான ஞானியார் அடிகளைப் படம் பிடித்துக் காட்டியுள்ளார். அடுத்து, அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழாராய்ச்சித் துறைத் தலைவராயிருந்த முதுபெரும்

புலவர் — மகா மகோ பாத்தியாய — பண்டித மணி மு. கதிரேசச் செட்டியாரவர்கள் பகர்ந்துள்ள பாராட்டுரையினையும் பார்ப்போமே:—

"உயர்திரு ஞானியாரடிகளை யான் பல ஆண்டுகளாக அறிவேன். அவர்களுடைய தமிழ்மொழிப் பயிற்சியும் வடமொழி அறிவும் சைவ சித்தாந்த நூல் உணர்ச்சியும் தமிழ் உலகத்திற்குப் பல்லாண்டுகளாகப் பயன்பட்டு வந்தன. சொற்பொழிவாற்றும் திறமையும் மாணவர்களுக்குத் தெளிவு பெறப் பாடஞ் சொல்லும் வன்மையும் நன்கு வாய்க்கப் பெற்றவர்கள். அரிய பொருள் எனினும் பேசுவோரது சோர்வினால் சிறப்புறுவதில்லை யென்பதும். பேசுவோரது சொல்வன்மையால் எளிய பொருளும் மக்களால் பெரிதும் மதிக்கப்படும் என்பதும் நம் அனுபவத்திற் கண்டனவாம். சிறிய பொருளையும் மிக விரிவாக எழுதுவதற்கும் பேசுதற்கும் ஆங்கில மொழி தகுதியுடையதென்று பலர் கூறக் கேட்டிருக்கிறேன்.

திரு. ஞானியாரடிகளுடைய சொற்பொழிவைக் கேட்டபின், அத்தகுதி, மொழிக்கு உரியதன்று என்பதும் பேசுவோரைப் பற்றியதென்பதும் அறிந்துகொள்ளலானேன் அடிகள் ஒரு பொருளைப்பற்றி விரிவுரை நிகழ்த்துங்கால் அது மிகக்குறுகிய கால எல்லையில் முடிக்கத் தக்கதாயினும் அதனைத் தம் மதிவன்மையால் பலவாறு வகுத்து வகுத்துக் கேட்பவர் மனம் சலியா வண்ணம் மிக நீண்ட நேரம் விளக்கிப் பேசுவார்கள். இவ்வியல்பு அடிகளுக்கே சிறந்ததொன்றாக அமைந்திருந்தது. வரலாற்றுப் பகுதிகளை எடுத்து விளக்குங்கால் அவற்றில் அமைந்துள்ள அறநிலை, நீதி, உலகியல் முதலியவற்றை மிகத்தெளிவாக எடுத்துக் கூறுவார்கள். எத்திறத்து மக்களையும் தம் உரை வன்மையால் பிணித்துத் தம் வயப்படுத்தும் ஆற்றல் அடிகளிடத்து

மிக்கிருந்தது. அரிய சொற்பொழிவாயினும் கால நீட்டிப்பில் கேட்பவர் சோர்வடைதல் இயல்பு. இவ்வியல்பு அடிகளுடைய சொற்பொழிவைக் கேட்பவர்கள்பால் காண்டல் அரிதாகும். சமய நிலையில் அடிகள் வீர சைவரா யினும் சித்தாந்த சைவம் முதலியவற்றில் கேட்பவர் மனம் பதியும் வண்ணம் பேசுதலில் மிகவும் சதுரப்பாடுடைய வர்கள்.

கடவுள் பக்தியும் சிறப்பாக முருகப் பெருமானிடத்துப் பேரன்பும் உடையவர்கள். கல்வியறிவுடையோரை நன்கு மதித்து அளவளாவும் இனிய குணம் உடையவர்கள். தமிழ் மொழியில் பேரார்வத்தையும் சைவ சமயப்பற்றையும் தமிழ் மக்களுக்கு விளைத்து வந்த இவர்தம் அரிய சொற் பொழிவுகள், இத் தமிழ் நாட்டில் நிகழாத இடம் இல்லை யென்றே சொல்லலாம். மடாதிபதிகள் செய்ய வேண்டிய அரிய செயல்களெல்லாம் திரு. ஞானியாரிடத்து நன்கு காணப்பட்டன. இக் காலத்துள்ள மற்றைய மடாதி பதிகள் இவர்கள் முறையைப் பின்பற்றுவார்களாயின், தமிழ் உலகிற்கே சிறந்த பயன் விளையும். இவர்கள் ஒழுகிய நெறி ஏனையோருக்குச் சிறந்த வழி காட்டியாக உள்ளதென்று கூறலாம்.

இவர்களிடத்துக் கல்வி பயின்ற மாணவர் பலரும், சொற்பொழிவு கேட்ட அன்பர்கள் பலரும், இவர்கள் பாற் கொண்டுள்ள பேரன்பு அளவிடுந் தரத்ததன்று. அதற்குக் காரணம் இவர்களுடைய அருட்குண நிலையே யாகும். இவர்கள் இழப்பு ஈடு செய்ய முடியாததொன்றென்றே கூறலாம். இத்தகைய பெரியார் ஒருவரை இனிக் காண்டல் எஞ்ஞான்று கூடுங்கொல்! திருவருள் துணைசெய்தல் வேண்டும் .........

திரு. ஞானியாரடிகளைப் போன்ற பெரியோர்களுக்கு வினையளவு நின்று அதன் ஒழிவில் அழியும் நிலையற்ற உடலாக இல்லாமல், என்றும் நின்று நிலவும் ஒரு நல்லுடலாக வாய்ப்பதற்குத் திருவருள் எப்பொழுது துணை செய்யுமோ? ……… இவர்கள் நினைவுக் குறியாக ஒரு தமிழ்க்கலை மாடம் சென்னையம் பதியில் நிறுவப்படுமாயின், தமிழர் நன்றியறிவு சிறந்த தொன்றாகத் திகழ்வதாகும்.”

இதுகாறும், பெரியார்கள் மூவரின் சிறந்த' பாராட்டுரைகளைப் படித்தோம். இனி, அடிகளார் மறைந்த ஞான்று பெரியார்கள் இருவர் இரங்கிப் பாடிய கையறு நிலைப் பாடல்கள் சிலவற்றைக் காண்பாம். முதலில், சென்னைப் பல்கலைக் கழகத் தமிழாராய்ச்சித்துறைத் தலைவராயிருந்த ச. வையாபுரிப் பிள்ளையவர்கள் பாடிய இரங்கற்பாக்கள் வருமாறு:—

[நேரிசை வெண்பா]

1\. அன்பொழுகு கண்ணும் அருளொழுகு நன்னெஞ்சும்
இன்பொழுக விள்ளும் இதமொழியும் — என்றும்
இனியுண்டோ உண்டோ எமதுசிவ ஞானத்
தனியரசு வீழ்ந்ததன்பின் தான்.

2\. எண்ணுதற்கொன் றுண்டோ இயர்புவிர் ஏய்ந்தசிவ
சண்முக ஞானத் தயாநிதியைப் — பண்பிற்(கு)
அரியானை அன்பர் அகத்தானை எங்கள்
பெரியானை யாம்பிரிந்த பின்.

3\. சைவத் தனிச்சுடரைச் சார்வற்ற மக்கள்தமக்(கு)
உய்வைத் தருஞான ஒண்ணிதியைத் — தெய்வச்
சிவசண் முகஞான தேசிகனை என்றும்
பவங்கழல நெஞ்சே பணி.

இனி, அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பேராசிரியரா கவும் கரந்தைக் கல்லூரி முதல்வராகவும் இருந்த பண்டித — நாவலர் — ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள் பாடிய பாடல்கள் வருமாறு:—

[ஆசிரிய விருத்தம்]

1. அப்பருவர்க் கடலேறி யருட்கடலிற் குளித்ததிருப்
புலிசை யாகும்
செப்பருநற் பதியதனின் மெய்ஞ்ஞானக் குரவனெனத்
திகழ்ந்த மேலோய்
திப்பியநீ றணியுருவும் அருளொழுகு மினைவிழியும்
தீஞ்சொல் வாயும்
இப்புவியோர் நினைந்துநினைந் திடர்க்கடலிற் குளித்திடநீ
யெங்குற் றாயே.

2. எழுமுகிலு மொன்றாகி யமிழ்தமழை பொழிவதென
எவரும் போற்றும்
பழுதறுநின் சொன்மழையால் உளங்குளிர்ந்தே
உயிர்குழைந்த படியே மெல்லாம்
அழுதழுதுண் ணீரறுமா றகன்றிடல்நின் னருணீர்மைக்
கமைவ தாமோ
தொழுதகுநின் றிருவடித்தொண் டினியாங்கள்
பெறுவதெவன் சொல்கிற் பாயே

3. ஆறுமுகப் பண்ணவனை முறைமையினுல்
நாடோறு மருச்சித் தேத்தி
ஈறிலவ னருட்கடலிற் றிளைத்தநின
திணையிலா அன்புக் கேற்ப
வீறுபுகழ்ப் பூசநாள் அவனடியை
மேவினையென் றாலும் யாங்கள்
தேறும்வகை யறியாது திகைக்கின்றேம்
திகைப்பொழிய அருள்செய் வாயே.

இதுகாறுங் கூறியிருப்பன கொண்டு, இப்போதுள்ள இளந் தலைமுறையினரும் இனி வரப்போகும் தலைமுறையினரும் புலிசை ஞானியார் அடிகளாரைப் பற்றி ஓரளவேனும் அறிந்துகொள்ளவியலும். இப்படியொரு கல்விக் கடல் — அறிவுக் கதிர் — குணக் குன்று — உழைப்பின் அருளுருவம் தன்னிடத்தே திகழத் தமிழ் நாடு கொடுத்து வைத்ததுதான்! அடிகளார் அயராது ஆற்றி விட்டுச் சென்ற அரும் பெரும் பணிகள் மேலும் தொடர்க! அடிகளாரின் அரும்பெறல் மரபின் பெரும்பெயர் நீடூழி வாழ்க!

« ஞானி ஞானி என்றுபல ஏத்தி
ஒருவற் புகழ்வர் செந்நாப் புலவர்
ஞானி ஒருவனும் அல்லன்
வானியும் உண்டுண் டறிவுசிறந் தோனே ».

— சு. ச.

# திலகவதி அம்மை துதி

(அடிகளார் அருளிய "திலகவதி அம்மை துதி" என்னும்
நூலிலிருந்து மூன்று பாடல்கள்:-)

[ஆசிரிய விருத்தம்]

1. உலகமெலாந் திருநீற்றின் ஒளிவிளங்க
மணிவிளங்க உவகை யோடும்
பலகலைசொல் ஐந்தெழுத்து விளங்கவரன்
பெயர்விளங்கப் பான்மை யோடு
தலம்விளங்க மறைவிளங்க அப்பருக்குத்
திருநீறு சாற்றித் தந்த
திலகவதி அம்மையார் அடிக்கமலம்
இரண்டினையுஞ் சிரத்திற் சேர்ப்பாம்.

2. நீயிலையேல் சைவமெனுஞ் சமயமெங்கே
அப்பரெங்கே நேய மெங்கே
கோயிலையாம் அடைவதெங்கே குறிக்கோளுங்
கொள்வதெங்கே குருநா னெங்கே
காயிலைவேற் பரசினைத்தாங் கரனெங்கே
தேவாரங் கருத லெங்கே
மாயிருஞா லம்போற்றுந் திலகவதீ
நின்னடியை வணங்கி வாழ்வாம்.

3. அப்பருமே நினையடைந்து மாசொழிந்தார்
நோயொழிந்தார் அளவில் சீர்த்தி
செப்பருந்தே வாரஞ்சொல் திறம்பெற்றார்
சிவஞானத் திறம்பெற் றுய்ந்தார்
ஒப்பதிக மில்லாத இறைநாவுக்
கரசென்ன ஓதப் பெற்றார்
எப்பொழுதும் உனைநினைத்துத் திலகவதி
யம்மைநலம் எய்தி வாழ்வாம்.

# சுந்தர சண்முகனாரின் நூல்கள்

| | | ரூ. | கா. |
|---|---|---|---|
| 1. வாழும் வழி | ... | 2 | 50 |
| 2. வள்ளுவர் இல்லம் | ... | 4 | 00 |
| 3. வீடும் விளக்கும் | ... | 2 | 00 |
| 4. இன்ப வாழ்வு | ... | 3 | 50 |
| 5. மலர் மணம் | ... | 4 | 50 |
| 6. பணக்காரர் ஆகும் வழி (இந்திய அரசின் பரிசு பெற்றது) | ... | 1 | 00 |
| 7. செந்தமிழாற்றுப்படை | ... | 1 | 00 |
| 8. தமிழ் அகராதிக் கலை (தமிழக அரசின் பரிசு பெற்றது) | ... | 10 | 00 |
| 9. திருக்குறள் தெளிவு | ... | 2 | 00 |
| 10. நாலடியார் நயவுரை | ... | 2 | 00 |
| 11. எழுத்தாளர் துணைவன் | ... | 2 | 00 |
| 12. தமிழர் கண்ட கல்வி | ... | 3 | 00 |
| 13. தமிழ் இலத்தீன் பாலம் | ... | 7 | 50 |
| 14. தொண்ணூறும் தொள்ளாயிரமும் | ... | 0 | 75 |
| 15. History of Tamil Lexicography (தமிழக அரசின் பரிசு பெற்றது) | ... | 2 | 00 |
| 16. தைத் திங்கள் | ... | 3 | 00 |
| 17. தமிழ் நூல்தொகுப்புக் கலை | ... | 12 | 00 |
| அடுத்த நூல்: | | | |
| கெடிலக்கரை நாகரிகம் (51 படங்களுடன்) | ... | 15 | 00 |

கிடைக்குமிடம்:

**புதுவைப் பைந்தமிழ்ப் பதிப்பகம்**
61-C, வைசியாள் தெரு, புதுச்சேரி-1.
Pondicherry-1. South India.
(நூல்கள் சென்னையிலும் கிடைக்கும்)